


08.01.2023

# அமரர்

# கந்தையா நடராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# 31ஆம் நாள் நினைவு மலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும்
வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# கந்தையா நடராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## " 31ம் நாள் நினைவுமலர் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமர்ப்பணம்



எம்மை நல்வழிப்படுத்தி எல்லோர்க்கும்
நல்லவராய் உயர்வான பண்பாளராய்
இன்முகத்தோடு புன் சிரிப்போடும் அன்புடனும்
பண்புடனும் பணிவுடனும் வாழ்ந்து வானுறையும்
தெய்வமாகி விட்ட எங்கள் குடும்பத் தலைவர்
அமரர் கந்தையா- நடராசா அவர்களின் ஞாபாகமாக
இந்த நினைவு மலரைக் காணிக்கையாக வைத்து
வணங்குகின்றோம் என்றும் எங்கள் உள்ளத்தில்
இருந்து எங்களை ஆசிர்வதிப்பீர்களாக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ


சிவமயம்

இவ்வுலகில்

1944 - 02 - 17

இறையுலகில்

2022 - 12 - 09



யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும்

வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# கந்தையா நடராசா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## திதி நிர்ணய வெண்பா

சுபகிருது வருடம் கார்த்திகைத் திங்கள்
தேய்பிறை அமர பட்சத் துதியை திதியில்
பார்புகழ் நடராசா பாசமுடன் பந்தம் பற்றறுத்த
பூதவுடல் நீங்கி சோதி விநாயகர் கழல் சேர்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தினை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உமதின்னருள் ஆவடுதுறைஅரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கு கற்பக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்கை மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என் கண்கள்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லை
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே!
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே!
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே!
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே!
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே!
ஆறுமுகம் ஆன பொருள் நீ! அருள வேண்டும்!
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மாறாத நினைவுகள்

இந்து சமுத்திரத்தின் நித்திலமாக விளங்கும் இலங்கைத்தீவின் தலையாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் பெரும் பக்தர்கள் வாழ்ந்த ஊராம் கந்தர் மடம் இங்கு புகழ் பூத்த குடும்பத்தைச் சேர்ந்த கந்தையா - இராசமணி தம்பதிகளின் இளையமகனாக 1944.02.08 ஆம் திகதி நடராசா அவதரித்தார்.

சிறிது காலத்தின் பின் தாயாரான இராசமணி இறந்துவிட்டார். இவரும் அண்ணனான சிவராசாவும் தந்தையாருடன் வாழ்ந்து வந்தார்கள். சிறிது காலத்தின் பின் தந்தையாரும் நோய்காரணமாக இறந்து விடவே சகோதரனுடன் வாழ்ந்து வந்தார். நடராசா தொழில் செய்யும் நோக்கத்துடன் பல இடங்களுக்கு சென்று வருவார். சில ஆண்டு காலம் சகோதரனுடன் வாழ்ந்து வந்த சிவராசாவும். நோய்காரணமாக இறந்து விட்டார். நடராசாவும் வாலிப வயதை அடைந்ததும் பெரியோர்கள் திருமணம் செய்ய முடிவெடுத்தார்கள். அவ்வண்ணம் வேல்னையைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளையும் சமயப்பற்றும் நல்விவசாயப் பற்றும் கொண்ட அவர் தம் பாரியார் பொன்னம்மா அவர்களின் தவப்பயனாக, மகாலிங்கம், கனகலிங்கம், சண்முகலிங்கம், சுந்தரலிங்கம், நகேஸ்வரி, மகாதேவன், சற்குணநாதன், என்னும் பிள்ளைகளைப் பெற்று சிறப்புடனே வளங்கொழிக்கும் வட்டக்கச்சியில் செம்மையுற வாழ்ந்து வந்தனர்.

இவ்வண்ணம் பெரியோர்கள் அவர் தம் புதல்வி நாகேஸ்வரியை தேர்ந்தெடுத்து 1972 ஆம் ஆண்டு நடராசா அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். இவர்கள் இருவரும் இலக்கம் 16 கட்சன் வீதி வட்டக்கச்சியில் இல்லறத்தை இனிது நடாத்தி வந்தனர்.

இல்லறப் பயனாக 1973 கார்த்திகை மாதம் மூத்த மகளான சதீஸ்வரியைப் பெற்றெடுத்து செல்லமாக (ராசாத்தி) என்று அழைத்துவந்தனர். உதவியாக விக்னேஸ்வரி, கோகிலவதனி, விஜிதா என்னும் பெண்குழந்தைகளைப்பெற்று அகமகிழ்ந்து இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் ஆண்குழந்தை வேண்டுமென்று இறைவனை வேண்டிய தவப்பயனாக அருள் எனும் தங்கமகனையும் அமுதா எனும் பெண்குழந்தையையும்-இரட்டையர்களாகப் பெற்றெடுத்தனர்.

இவ்வாறு இனிதே வாழ்ந்து வரும் வேளையில் கடைக்குட்டிப் பெண்குழந்தைகளாக நந்தினி, நளினி, எனும் இரட்டையர்களைப் பெற்றெடுத்து வாழ்ந்து வரும் வேளையில் தான் நேசிக்கும் சாரதித் தொழிலையும் கூடவே மனைவியுடன் சேர்ந்து விவசாயத்தையும் கவனித்து வந்தார். இந்த வேளைகளில் சிலகாலம் வெளிநாடு (சவுதி அரேபியாவிற்கு) சென்று அங்கு பணிபுரிந்து மீண்டும் தனது சொந்த இடத்திற்கு வந்து மீளவும் தனது லொறி ஓட்டுணர் வேலையைத் தொடர்ந்து செய்தார். பின்னர் கரைச்சி, பலநோக்கு கூட்டுறவுச்சங்க லொறி சாரதியாக வேலை செய்து கொண்டிருந்த காலப்பகுதியில் பிள்ளைகள் கல்வி கற்று பெரியவர்களானார்கள் இந்த இனிமையான காலப்பகுதியில் மூத்த மகளும் பெரியவளாகி திருமணவயதை அடைந்தார். அவருக்கு திருமணம் செய்யும் நோக்குடன் மூத்த மகள் சதீஸ்வரிக்கு கந்தரோடையைச் சேர்ந்த அருளானந்தம் என்பவரையும் இரண்டாவது மகள் விக்கினேஸ்வரிக்கு கீரிமலையைச் சேர்ந்த நகுலேஸ்வரனையும் மூன்றாவது மகளான கோகிலவதனிக்கு தாய்மாமன் மகன் ஸ்ரீதரனையும் நான்காவது மகள் விஜிதாவுக்கு நாட்டின் மீது பற்றுக்கொண்ட செட்டிகுளத்தைச் சேர்ந்த அன்ரன் ராஜாவையும் மணம்முடித்து வாழ்ந்து வரும் வேளையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலைகளால் பாதிக்கப்பட்டு ஈடுசெய்ய முடியாத இழப்புகளையும் சந்தித்து சொந்த இடத்தை விட்டு இடம் பெயர்ந்து மீளவும் சொந்த இடம் வந்து மனச்சோர்வுற்று இருந்தார். சிறிது காலத்தின் பின்னர் மகனுக்கும் திருமணம் செய்ய எண்ணியிருந்தார். எனவே நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்ட றூபி (ஆசிரியர்) எனும் நங்கையைத் திருமணம் செய்து வைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடன் பிறந்த அமுதா என்பவரும் திருமணவயதை அடைந்தார் இவருக்கு தாய்மாமன் மகனான நிலாகரனை திருமணம் செய்து ஜேர்மனியில் வசித்து வருகின்றார்கள்.

பின்னர் கடைக்குட்டிகளான நந்தினிக்கு கிளிநொச்சி அம்பாள்குளத்தைச் சேர்ந்தவரும் பிரான்சை வசிப்பிடமாகக் கொண்டவருமான சதீசன் என்பவருக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.

கடைக்குட்டிகளில் ஒருவரான நளினிக்கு கிளிநொச்சி பரந்தனைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐங்கரனை திருமணம் செய்து வைத்தார்கள். இவ்வாறு சந்தோசமாக வாழ்ந்து வரும் வேளையில் இவருக்குப் பேரக்குழந்தைகள் என்றாலே அலாதிபிரியம் ஒவ்வொரு பேரக்குழந்தைகளுடனும் அன்பாக பேசி ஆசையுடன் அரவணைத்து இன்முகத்துடன் இனிப்புப் பண்டங்களை பாசத்துடன் ஊட்டிமகிழ்ச்சியடைவார்.

இவருடைய செல்லப் பேரக்குழந்தைகளான டிசாந், நிறோஜா (அமரர்), பவப்பிரியா, அரிஸ், கிருஷென், மேருஜன்,(அமரர்), றேனுஜா, மேனுஜன், மதுசா, தமிழினியன், கபிஸ்கா, அஸ்வின், அபிரா, அக்சரன், அஸ்விதா, ஆத்விகா, கேசிகன், கபிசன், ஆகிய பேரக்குழந்தைகள் புடைசூழ மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்த வேளையில் தனக்கு வந்த நோய் காரணமாக 20 வருடங்களாக அவதிப்பட்டார். உடற்பயிற்சிகளைச் செய்வார் இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் சில நாட்கள் நோய்காரணமாக மருத்துவமனைக்குச் செல்வார் மருந்தும் கையுமாக இருப்பார். தனியார் மருத்துவமனைகளுக்கும் பிள்ளைகள் அழைத்துச் சென்று அன்பாக தந்தையாரை அரவனைத்து வரும் நாளில் திடீரென உணவின் மீதுகொண்ட வெறுப்பால் உண்பதைக் குறைத்து கொண்டார். இவ்வாறு இவர் இருக்கும் நாட்களில் மூத்த மகளும் பேரனும் லண்டனில் இருந்து தந்தையாரைப் பார்ப்பதற்கு இங்கு வந்தார்கள். அவர்கள் வரவால் நோய் பறந்தது போல் மீண்டும் உசாராகி நடந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில மாதங்களின் பின் இளையமகள் மருமகன், பேரக்குழந்தைகள் ஜேர்மனியில் இருந்து வந்தார்கள். 17 ஆண்டுகள் பாராமல் இருந்த மகள், மருமகன் பேரக்குழந்தைகளைக் கண்டு கொஞ்சி மகிழ்ந்து சந்தோசமாக இருந்தார். மீண்டும் அவர்கள் ஊர் திரும்பினார்கள் பின்பு சில நாட்களில் அவருடைய நோய் தீவிரமாகி கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். அங்கு இவருக்கு மேலதிக சிகிச்சை கருதி யாழ்போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். அங்கும் அவருக்கான சிகிச்சைகள் பயனின்றிப் போய்விடவே அப்பாவை வீட்டிற்கு கூட்டிச் சென்று வீட்டிலே வைத்துப் பார்ப்போம் எனப் பிள்ளைகள் முடிவெடுத்தார்கள். பிள்ளைகள் தந்தையாரை ஓயாது கண்விழித்துப் பார்த்தார்கள். இருந்தும் அவருடைய உடல் நிலை வரவர மோசமடைந்து சென்றது. பிள்ளைகள் கண்ணீர் வடித்தார்கள். மருத்துவர்களை வீட்டிற்கு அழைத்து தந்தையாரின் உடல் நிலைகளைக் கேட்டறிந்தார்கள். எவ்வாறான முயற்சிகளை செய்தாலும் காலன் அவர் மேல் கொண்ட பிரியத்தால் அவரை இறைவனிடம் கூட்டிச் செல்லவே தீர்மானித்தார். அன்று வெள்ளிக்கிழமை 9.12.2022 காலை அப்பாவிற்கான பணிவிடைகளைச் செய்து முடித்து அவருடைய பேரக்குழந்தையைப் (அரிசை) பக்கத்தில் இருத்திவிட்டு அப்பா நிலைபற்றி கலந்து பேசிக்கொண்டிருந்த வேளையில் காலை 11.30 மணியளவில் எங்களுக்கு எதுவுமே சொல்ல விடாமல் அவரை இறைவன் சொர்க்கத்திற்கு அழைத்துச் சென்று விட்டார். அழுத புரண்டோம் எவ்வாறானாலும் அப்பா கண்திறக்கவுமில்லை மூச்சு விடவுமில்லை இறைவனின் திருவிளையாடலில் விதியை யாரால் மாற்ற முடியும். எங்கள் அப்பா சொர்க்கத்தில் இருந்து எங்களை எப்பொழுதும் வழிநடத்துவார் என்று வாழ்கின்றோம்.

"வாழ்வாங்கு வாழ்ந்த அன்புத்தெய்வம்
அக்கினியில் சங்கமித்த போதும் - அன்னாரின்
நினைவு எந்நாளும் எம் நெஞ்சில் அணையாத
தீபமாய் எந்நாளும் வாழும்"

ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

எனக்குத் துணையாக வந்த நாள் முதல்
இந்த நாள்வரை என்னைக் காத்தருளிய தெய்வமே!
உங்களிடம் நான் பட்ட கடன்
சொல்லில் அடங்காது எம் குடும்ப குல தெய்வமே!


கரம் பிடித்த நாள் முதல் கூடவே வந்துவிட்டு
இன்று என்னைக் கண்கலங்க விட்டுச் சென்றது ஏனோ!
எங்கு சென்றாலும் யாருடன் செல்கிறீர்கள் என்று
எனக்குப் பாதுகாப்பு தேடுவீர்களே!
இப்போ யாரென்னை பாதுகாப்பார்கள்!
என்று எண்ணி என்னை விட்டுச் சென்றீர்கள் என்குல தெய்மே!


எட்டுப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தோம்
சந்தோசமாக வாழ்ந்தோமே!
அவர்கள் கூட என்னை விட்டுப் பிரிந்து சென்றாலும்
நீங்கள் ஒரு கணமேனும் என்னைவிட்டுப்
பிரிந்ததே இல்லையே ஏன் இன்று மட்டும்
என்னைத் தனியே தவிக்க விட்டுச் சென்றீர்கள்!

சத்தமின்றி உறங்கி விட்டீரே என் தூக்கம்
பறிந்து விட்டீரே ஆனாலும் என் மனதில்
உங்கள் முகம் என் இதயத் திரையில்
இருந்தும் என்றுமே மாறாது என் குல தெய்வமே.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் நினைவுகளில் இருந்து.....!

அப்பா, அப்பா என்று ஆசையாகக் கூப்பிடுவோமே
இனியாரை அப்பா என அழைப்போம்
எங்கள் குடும்ப தெய்வமே!
சிறுவயதில் உங்கள் கரம் பிடித்து
உங்கள் தோள்மீது ஏற்றி எம்மை சுமந்து வளர்த்தீர்களே!
எங்களைக் கடிந்து ஒருவார்த்தை கூடச்
சொல்லமாட்டீர்களே! ஆயிரம் உறவுகள்
இருந்தாலும் அப்பா நீங்கள் இல்லாத
வீடு வெறுமையாக் கிடக்கின்றது.
நீங்கள் உலாவிய முற்றம் வெறுமையாகிக் கிடக்கின்கிதே
அப்பா
உங்களுக்கு வருத்தம் என்றாதுமே
துடித்து துவண்டு விட்டோம்
எங்கள் அப்பாவை எப்படியாவது
காப்பாற்றி விட வேண்டுமென்ற அவாவில்
கண்விழித்து இரவு பகல் உமதருகில் இருந்து
நேரம் தவாறாது உமது தேவைகளை
நிறைவு செய்தோம்
இறைவன் இன்னும் சிலகாலம் அப்பாவை எங்களுடன்
விடுவார் என எண்ணினோம்
காலனே எம்மீது இரக்கமின்றிக் கூட்டிச்
சென்று விட்டான்.
உங்கள் பிரிவால் துடித்து நிற்கின்றோம்
அப்பா என்ற எங்கள் தெய்வத்தை
எங்கே இனிக் காண்போம்
மீண்டும் ஒரு ஜென்மம் உண்டானால்
நீங்கள் தான் எங்கள் அப்பாவாக வர
இறைவனை வேண்டி நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்.....!

அம்மப்பா என்று ஆசையாகக் கூப்பிடுவோம்!
அம்மப்பா எங்களை விட்டு எங்கே போய்விட்டீர்!
அம்மப்பா நாங்கள் எல்லோரும் உங்களிடம்
ஓடி வந்தோமே இன்னொரு முறை வந்தால்
எங்கள் அம்மப்பாவை எங்கே காண்போம்
அம்மப்பா என்று யாரை அழைப்போம்!
போனில் கூட எங்களுடன் கதைத்து மகிழ்வீர்களே!
ஆசையாக அப்பு என்று மழலை மொழியில்
கூப்பிட்டேனே அப்பப்பா என்று கூப்பிடமுன்
என்னை விட்டுப் போய்விட்டீர்களே
எங்கே உங்களை காண்போம்
கூடி அழுகின்றோம்
நட்சத்திரமாக வானில் இருந்து
எங்களைப் பாருங்கள்!
நாங்கள் உங்கள் நினைவுகளை
என்றும் மறவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் புலம்பல்

மெல்லெனப் பாதங்கள் பூமியில் படாததுபோல்
நடப்பீர்களே உங்கள் இனிய மொழி
எங்கள் காதுகளில் இன்னும் ஒலிக்கிறதே
எங்களையும் உங்கள் அன்புப்பிள்ளைகளாக
அரைவனத்தீர்களே!
காலையில் எழுந்தவுடன் உடற்பயிற்சி என
முற்றத்தில் எட்டடிப்பீர்களே! (8)
எட்டடித்த கோடுகள் முற்றத்தில் மறையவில்லை
மாமா நீங்கள் எங்களை விட்டு எங்கே போய்விட்டீர்கள்
வந்தோரை வரவேற்று குடும்பத்தலைவனாக
விளங்கிய எங்கள் குல மாணிக்கமே
எங்கே காண்போம் இனி யாரை
மாமா எனக் கூப்பிடுவோம்
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்வோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துணர் புலம்பல்.....!

ஒளிவீசும் கண்ணும் வாயாரப் புன்னையும்
கருணைமிகு பார்வையும் உள்ளமதைக்
கொள்ளை கொள்ள மச்சான், மச்சான்
என வாயார அழைத்து நின்றோம்
நல்லாசானாக இருந்து எம்மை
வழி நடத்திய குடும்ப விளக்கே

உம்மரண செய்தி கண்ட எமது உள்ளம்
இடிவிழுந்த வாழைமரம் போல் கருகி விட்டதையா!
இனி உங்கள் திருமுகம் காண்பது எப்போது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்காஷ்டகம்

ப்ரஹ்மமுராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாத சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுனி ப்ரவார்ச்சித லிங்கம்
காம தஹன கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வஸுகந்த ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூஷிதலிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக ஸயஜ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்


குங்குமசந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்தி பிரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பரம்பர பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்
லிங்காஷ்டக மிதம் புண்யம் யஹ் படேச் சிவ ஸந்நிதௌ
சிவலோக மவாப்நோதி சிவேந ஸஹ மோததே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிகாப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்ய்புள் முறையாய் புனைவதற்க்கு
என்னின் றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாரமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌியம்மா தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினை யாவும் பனி போலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்கு தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடிய மகிடாசூரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீ இருந்தாய்
பரணை நினைத்தல்லோ பதி விரதம் நீ இருந்தாய்
அரணை நினைத்தல்லோ அன்று நீ நோன்பிருந்தாய்
சங்கரணை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரணை பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தை கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பை புனைந்து விடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்து விடு நுண்ணறிவை ஊட்டி விடு
வல்லமையைத் தந்து விடு வையகத்தில் வாழ விடு
காளிமகா வேியரே காப்பருளும் தேவியரே
காப்பை புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கும் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாரேனம்மா நயந்தென்மைக் காருமம்மா
காளிமகா தேவியளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்து வரும்
தொடர்ந்து அணிவோருக்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோருக்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கள் எல்லாம் நலமுடனே இணைந்துவரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிக விட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டு போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ் சுடரே காளியுனைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலை போல் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சக்கதிலுள் ளோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சகலகலா வல்லிமாலை

திருச்சிற்றம்பலம்

கலைகளை உணர்விக்கும் அம்மை
ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர்.

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்
துண்டானுறங்க வொழித்தான் பித்தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பேசகல கலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள் வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே கனதனக் குன்றுமைம் பாற்
காடும் சுமக்குங் கரும்பே சகலகலா வல்லியே

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பணுவற்றுறை தோய்த்த கல்வியுஞ் சொற் சுவை நோய்
வாக்கும் பெருகப்பணித் தருள் வாய் வட நூற் கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந் நாளினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலா வல்லியே!

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாதங் கேர கமென்
நெஞ்சத் தடத்தல ராத தென் னேநெடுந் தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தேன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலா வல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியுந் தீஞ்சொற் பணுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பாலமுதந்தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே!

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய் நளினாசனஞ்சேர்
செல்விக்கரி தென் றொரு கால முஞ்சிதை யாமை நல்கங்
கல்வி பெருஞ் செல்வப் பேறே சகல கலா வல்லியே!

சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலத் தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடிடீயோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத்தானே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரு மென்
பண்கண் டளவிற் பணியச் செய் வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பினுள் போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலா வல்லியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெண்பா

வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன் - செய்ய
திருவார் பெருந்துறையான் தேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து. 1

ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என்செய்கேன்- தீர்ப்பரிய
ஆனந்த மாலேற்றும் அத்தன் பெருந்துறையான்
தானென்பர் ஆரொருவர் தாழ்ந்து. 2

செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பறியேன்- வையத்
திருந்துறையுள் வேல்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். 3

முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்- தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கும் மருந்து. 4

அறையோ அறிவார்க் கனைத்துலகும் ஈன்ற
மறையோனும் மாலுமால் கொள்ளும்- இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியா
திருந்துறையும் என்னெஞ்சத் தின்று. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தென்னை ஏற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே யாக்கும் வந்தென்மனத்தை- அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளால் நோக்கும்
மருந்திறவாப் பேரின்பம் வந்து. 6

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே- சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி. 7

யாவொர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்கும் கீழாம் அடியேனை- யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் எம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை. 8

மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த
தேவரும் காணாச் சிவபெருமான்- மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும். 9

இருந்தென்னை ஆண்டான் இணையடியே சிந்தித்
திருந்திரந்து கொள்நெஞ்சே எல்லாம்- தருங்காண்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவாய் என்மனத்தே வந்து. 10

இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியாய் - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. 11

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேவராய சுவாமிகள் அருளிய

# கந்த சஷ்டி கவசம்

### காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள்
கந்த சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடந்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தமும் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவணபவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொலி யையும்
நிலைபெற றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி அதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக
மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுடிகு டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டிகுடிகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோத னென்
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்றலை வைத்துன் இணையடிகாக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரெண்டும் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர் கை வேலாம் கவசத் தடியை
விழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தெனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து உணவு ஆகச்
சூர பத்மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேம்வர்க்கு உவந்(து) அமுது அழித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனகசபைக்(கு) ஓர் அரசே!
மயில்நடம் இடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

-கவசம் முற்றிற்று-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# சிவபுராணம்



தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாமவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகி நின் றண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அனேகன் இறைவ னடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையாடி போற்றி!
தேச னடி போற்றி சிவன்சே வடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி!
சீரார் பெருந்துறைநந் தேவ னடி போற்றி!
ஆராத இன்பம் அருளு மலை போற்றி!
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுவதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்தும் மண்ணிறைந்தும் மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளதுள் ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராத அமுதே அளவில்லாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னையாட் கொண்ட எந்தை பெருமையனே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டு ணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர் வுமிலாப் புண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்குமெம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்த வினைப்பிறவி சாராமே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென் பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லி பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கிழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணித்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

கற்க கசடறக் கற்பவை கற்றபின
நிற்க அதற்குத் தக.

கற்பதற்குத் தகுதியான நூல்களைப் பழுதில்லாமல் கற்க வேண்டும் கற்றதன் பின்னர் கற்ற அக்கல்வியின் தகுதிக்குத் தகுந்தபடி நடக்கவும் வேண்டும்
புலியூர்க் கேசிகன் (திருக்குறள் - புதிய உரை)

கல்வி கற்க நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.
மு. வரதராசன்

கற்கத் தகும் நூல்களைப் பிழை இல்லாமல் கற்க் கற்ற பிறகு கற்ற கல்விக்கு ஏற்ப நல்ல வழிகளில் வாழ்க.
சாலமன் பாப்பையா

பிழை ,ல்லாதவற்றைத் தனது குறைகள் நீங்குமளவுக்குக் கற்றுக்கொள்ள வேண்டும் கற்ற பிறகு அதன்படி நடக்கவேண்டும்
மு. கருணாநிதி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

'எண்' என்று சொல்லப்படுவதும், 'எழுத்து' என்று கூறப்படுவதும், என்னும் இவை இரண்டும் இவ்வுலகில் வாழும் உயிர்களுக்குக் 'கண்' என்பர்கள்
புலியூர்க் கேசிகன் (திருக்குறள் - புதிய உரை)

எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.
மு. வரதராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் நல்லவர்க்கு அறிவியலும் கலைஇயலும் சிறந்த கண் என்று அறிந்தவர் கூறுவர்.
சாலமன் பாப்பையா

எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள்
மு. கருணாநிதி

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.
எல்லாரும் மகிழும் வகையிலே கூடியிருந்து, 'இனி என்று மீளக் கூடுவோம் என்று' எண்ணும்படியாகப் பிரிதல் கல்வியறிவினரது செயல் ஆகும்.
புலியூர்க் கேசிகன் (திருக்குறள் - புதிய உரை)

மகிழும் படியாகக் கூடிப்பழகி (இனி இவரை எப்போது காண்போம் என்று ) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்..
மு. வரதராசன்

மற்றவர்கள் கூடி வரும்போது, மனம் மகிழ அவர்களுடன் கலந்து பேசி, இனி இவரை எப்போது, எவ்வாறு சந்திக்கப் போகிறோம் என்று அவர்கள் எண்ணுமாறு பிரிவது கற்று அறிந்தவரின் செயல்.
சாலமன் பாப்பையா

மகிழ்ச்சி பொங்கிடச் சேர்ந்து பழகுவதும், பிரிந்திட நேரும் போது மனங்கலங்குவதும் அறிவிற் சிறந்தோர் செயலாகும்
மு. கருணாநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்கடையரே
கல்லா தவர்.

செல்வர்களின் முன்னே உதவி கேட்கும் எளியவர் பணிவோடு நிற்பது போல, ஆசிரியரிடம் பணிந்து நின்று கற்றவரே சிறந்தவர் கல்லாதவரோ கடையர்!
-புலியூர்க் கேசிகன் (திருக்குறள் - புதிய உரை)

செல்வர் முன் வறியவர் நிற்பது போல் (கற்றவர்முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்விக் கற்றவரே உயர்ந்தவர், கல்லாதவர் இழிந்தவர்.
-மு. வரதராசன்

செல்வர் முன்னே ஏழைகள் நிற்பது போல் ஆசிரியர் முன்னே, விரும்பிப் பணிந்து கற்றவரே உயர்ந்தவர் அப்படி நின்று கற்க வெட்கப்பட்டுக் கல்லாதவர், இழிந்தவரே.
-சாலமன் பாப்பையா

அறிவுடையார் முன் அறிவில்லாதவர் போல் தாழ்ந்து நின்று, மேலும் கற்றுக்கொள்பவர்களின் ஆர்வத்தைக் கற்றுக் கொள்ளாதவர்கள் கடைநிலை மாந்தராக கருதப்படுவார்கள்
-மு. கருணாநிதி

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

மணலிலே தோண்டும் கிணற்றில், தோண்டிய அளவுக்கே நீர் ஊறும் மாந்தருக்கும் அவரவர் முயன்று கற்றதன் அளவுக்கே அறிவும் ஊறிச் சுரக்கும்
-புலியூர்க் கேசிகன் (திருக்குறள் - புதிய உரை)

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும், அதுபோல் மக்களின் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.
-மு. வரதராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணலில் தோண்டிய அளவு சிறு குளத்தில் நீர் ஊறும்
மக்கள் கற்ற அளவே அறிவும் வளரும்.
-சாலமன் பாப்பையா-

தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போலத் தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்
-மு. கருணாநிதி

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லாத வாறு.**

கற்றவனுக்கு எந்த நாடும் நாடாகும் எந்த ஊரும் ஊராகும் இதுவே உண்மையாக இருந்தும் ஒருவன் சாகும் வரைக்கும் கல்லாமலிருப்பது எதனால்?
-புலியூர்க் கேசிகன் (திருக்குறள் - புதிய உரை)

கற்றவனுக்கு தன் நாடும் ஊரும் போல வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும் ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்.
-மு. வரதராசன்

கற்றவனுக்கு எல்லா நாடும் சொந்த நாடாம் எல்லா ஊரும் சொந்த ஊராம் இதனைத் தெரிந்தும் ஒருவன் இறக்கும் வரை கூடப் படிக்காமல் இருப்பது ஏன்?
-சாலமன் பாப்பையா

கற்றோர்க்கு எல்லா நாடுகளிலும் எல்லா ஊர்களிலும் சிறப்பு என்கிறபோது, ஒருவன் சாகும் வரையில் கற்காமல் காலம் கழிப்பது ஏனோ?
-மு. கருணாநிதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டிக்கிரியைக்குத் தேவையான பொருட்கள்

நெல்லு
பச்சை அரிசி
பயறு
எள்ளு
தேங்காய் 20
கழிவு நூற்பந்து
பஞ்சவர்ண நூல்
விபூதி
குங்குமம்
சந்தனம்
பன்னீர்
அபிஷேக்கூடு
அபிஷேகத்திரவியம்
நவதானியம்
நெற்பொரி
நெய்
சமித்துக்கட்டு
ஊதுபத்தி
விளைவு குடம்
சாம்பிராணி
அரிசி மா
மஞ்சள் மா
கயிறு
நல்லெண்ணை
அரப்பு
(குருக்கள்) வேட்டி, சால்வை
கும்பவேட்டி

வேட்டி, பட்டுத்துண்டு
சிவப்பு பச்சை
பச்சை மா (புல்லாந்தி இலையை உலர்த்தி இடித்து எடுப்பது)
சிவப்பு மா (செங்கள் தூள்)
கரி மா (கரியில் இடித்து எடுப்பது)
2 தானத்திற்கு அரிசி, மரக்கறி
செங்கள்-1, வைக்கோள்-1 கட்டு
கத்தி,தீப்பெட்டி
வெற்றிலை, பாக்கு
வாழைப்பழம்,எலுமிச்சைப்பழம்
பழ வகைகள்,அறுகம்புல்
1m வெள்ளைத் துணி
பால்,தயிர்
கோசலம், கோமயம்
இளநீர், வாழையிலை, மாவிலை
முட்டி2, சட்டி1
உரல்,உலக்கை
தேங்காய் எண்ணை
சில்லறைப்பணம்
செம்பு 12, குடம் 1
குத்து விளக்கு, தட்டம், மான் தோள்
பூ மாலை, சரப்பந்து, அமுது
பலகார வகைகள், 1 படி பச்சை அரிசி பொங்கள்
3 படி அரிசியிற் சோறு
களி வகை
தோரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண வீட்டில் அபரக்கிரியைகளைச்செய்வதற்கு வேண்டிய பொருட்களின் விபரம்

நெல்லு
பச்சை அரிசி
பயறு
எள்ளு
தேங்காய்
தேங்காய் எண்ணை
விபூதி
சந்தனம்
குங்குமம்
அபிஷேக்கூடு
மஞ்சள் மா
அரிசி மா
அபிஷேகத்திரவியம்
பன்னீர்
நெய்
தேன்
நல்லெண்ணை
அரப்பு
அத்தர்
ஊதுபத்தி
சாம்பிராணி
தசாங்கம்
நெற்பொரி
நவதானியம்
கழிவு நூற்பந்து
பஞ்சவர்ண நூல்
விளைவு சுடம்

சமித்துக்கட்டு
பட்டுத்துண்டு
குருக்கள் வேட்டி
முட்டி 2
சட்டி 2
செம்பு 13
குடம் 1
குத்து விளக்கு
உரல், உலக்கை
அறுகம் புல்
மாவிலை,வாழையிலை
கோசலம், கோமயம்
பால்,இளநீர்
மான் தோல்
தட்டம்
வேட்டி, சால்வை
(கிரியை செய்வோருக்கு)
வாழைப்பழம்
பாக்கு
வெற்றிலை
(இறந்தவருக்கு) வேட்டி, சால்வை/
சீலை
கத்தி, தோரணம், கயிறு, தீப்பெட்டி
6m வெள்ளைத் துணி
(புதியது)

**இப்பொருட்களை கிரியை செய்யும் குருக்களும் கொண்டு வருவார் அவரிடம் ஆலோசித்துச் செய்யவும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருங்கைக் கீரையின் பயன்கள்

1. மனித உடலுக்கு ஆரோக்கியத்தையும், தேவையான புரதச் சத்துக்களையும் அளிப்பதில் காய்கறிகளும், பச்சைக்கீரைகளும் முக்கிய பங்காற்றுகின்றன.

2. கீரையைப் பச்சைப் பசேல் என்று அதன் நிறத்திலேயே சமைப்பது தான் மிகவும் சிறந்தது.

3. இதில் விற்றமின் ஏ, பி, சி சத்துக்களும், சுண்ணாம்புச்சத்து,புரதம். இரும்பு, கந்தம்,குளோரின், தாமிரம், கல்சியம், மக்னீசியம் போன்ற சத்துக்களும் உள்ளன.

4. மேலும் அனைத்து தாதுக்களும் சம அளவில் கிடைக்கும். முருங்கைக்ககீரையை அவ்வப்போது உணவில் சேர்ந்துக் கொள்வதால் நோய் எதிர்ப்பு சக்தியும் , உடல் வலிமையும்,உறுதியும் கிடைக்கிறது.

5. முருங்கைக் கீரையை,வேர்க்கடலையுடன் சேர்த்துச் சாப்பிட கர்ப்பப்பை வலுவடையும்.

6. முருங்கைக்கீரை உண்பதால் , தாதுபலம் பெருகுவதுடன், இரத்தம் அழுத்தம் குணமாகும்.

7. கொழுப்புச்சத்து குறைவடைவதுடன் , நீரிழிவு நோயும் குணமாகின்றது.

8. முருங்கைக்கீரை சாப்பிடுவதால் காமாலை குறையும். கண்பார்வை தெளிவாகும். ஆனால், மூட்டு வலி உள்ளவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவுகள்

01.பாரதியார் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட ஆண்டு 1982

02.எந்த வட்டமேசை மாநாட்டில் இந்திய தேசிய காங்கிரஸ் கலந்து கொண்டது? இரண்டாவது

03.காந்தியடிகள் சபர்மதி ஆஸ்ரமத்தை துவக்கிய ஆண்டு 1915

04.இரண்டாவது பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட ஆண்டு 1957

05.தி.மு.கவை நிறுவியவர் யார்? அண்ணாதுரை

05தமிழ்நாட்டில் இரயத்வாரி முறையைக் கொண்டு வந்தவர் சர் தாமஸ் மன்றோ

06.சிறுகதையின் தந்தை என்று அழைக்கப்படுபவர் புதுமைப்பித்தன்

07.கண்ணதாசன் வெளியிட்ட இதழ்களுள் ஒன்று வானம்பாடி

08.தண்ணீர் தண்ணீர் என்னும் நாடகத்தின் ஆசிரியர் யார்? கோமல் சுவாமிநாதன்

09.ஆனந்த விகடன் வெள்ளிவிழா பரிசு பெற்ற சிறுகதை எது? குளத்தங்கரை அரச மரம்

10.குடிமக்கள் காப்பியம் என்னும் அடைமொழியால் குறிக்கப்பெற்ற நூல் சிலப்பதிகாரம்

11தாய்சேய் இலக்கணக்குறிப்பறிக? உம்மைத் தொகை

12.மலர்க்காரம் என்னும் சொல்லின் இலக்கண குறிப்பு? உவமைத் தொகை

13.கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தொடரைக் கூறியவர்? அறிஞர் அண்ணா

14பரம்பிற் கோமான் என்று அழைக்கப்பெற்றவர் பாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.இயற்கை கவிதை தத்துவ அறிஞர் ரவிந்திரநாத் தாகூர்

16.ஒருங்கிணைந்த அத்வைதத்தை போதித்தவர் ஸ்ரீஅரவிந்தர்

17தில்லையில் வாழ்ந்த சமயத்துறவி திருநீலகண்டர்

18.சுதந்திர தொழிலாளர்கள் கட்சியை ஆரம்பித்தவர் அம்பேத்கார்

19அஜந்தா குகை அமைந்துள்ள மாநிலம் மஹாராஷ்டிரா

20.இந்தியாவில் மிக நீளமான இருப்புப்பாதை கௌஹாத்தி-திருவனந்தபுரம்

21பெரியார் வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் கேரளா

22இந்தியாவில் முதன்முதலாகக் காப்பி சாகுபடி நடைபெற்ற மாநிலம் கர்நாடகம்

23.1983ல் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகம் எது? அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்

24.இந்தியாவில் தலசுயஆட்சி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது?1916

25தமிழக முதல்வர்களில் சத்துணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தவர் யார்? எம்.ஜி.இராமச்சந்திரன்

26.சென்னைப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு எது?1857

27.தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்ற நிலையம் உள்ள இடம் கோயம்புத்தூர்

28.உடுக்கை இழந்தவன் கை போல என்னும் உவமை மூலம் விளக்கப் பெறும் கருத்து யாது?கையறுநிலை

28.குந்தித் தின்றால் குன்றும் மாளும்-இவ்வுவமை விளக்கும் கருத்தைத் தேர்க? சோம்பல்

29.இளமையில் கல்- எவ்வகை வாக்கியம்? கட்டளை வாக்கியம்

30.மாண்பு பெயர்ச் சொல்லின் வகை அறிக? பண்புப்பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவில்கின்றோம்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்**
**உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு"**

அன்பின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் பாசத்தின் இருப்பிடமாய் பொறுமையின் பொக்கிசமாய் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மையும் வாழ வழிகாட்டிவானுறையும் தெய்வமாகி விட்ட எங்கள் குடும்பத் தலைவரின் பிரிவுச்செய்தி கேட்டு எல்லா வகையிலும் எமக்குதவி செய்த அனைவருக்கும் அமரரின் இறுதிக் கிரியையில் பங்கு கொண்டோருக்கும் வேண்டிய போது முன் வந்து உதவி செய்தவர்களுக்கும் தபால், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி அனுதாபத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் நேரம் அறிந்து வாகன சேவை செய்த உதவியோருக்கும் சடங்கு அந்தியேட்டிக் கிரியையின் போதும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையின் போதும் வருகை தந்து உதவியவர்களுக்கும், உணவு தந்த உதவியவர்களுக்கும் அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தனை செய்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் இறுதி வரை இவருடன் இருந்து துணைபுரிந்தவர்களுக்கும் இம் மலரை அச்சிட்ட தமிழரசன் பதிப்பகத்தினருக்கும் எங்கள் இதயபூர்வான நன்றிகள்.

நன்றி


\- குடும்பத்தினர் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

1. அறஞ்செய்ய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண் எழுத்து இகழேல்
8. ஏற்பது இகழ்ச்சி
9. ஐயம் இட்டு உண்
10. ஒப்புரவு ஒழுகு
11. ஓதுவது ஒழியேல்
12. ஒளவியம் பேசேல்
13. அஃகஞ் சுருக்கேல்
14. கண்டு ஒன்று சொல்லேல்
15. ஙப்போல் வளை
16. சனி நீராடு
17. ஞயம்பட உரை
18. இடம் பட வீடு எடேல்
19. இணக்கம் அறிந்து இணங்கு
20. தந்தை தாய் பேண்
21. நன்றி மறவேல்.
22. பருவத்தே பயிர் செய்
23. மன்று பறித்து உண்ணேல்
24. இயல்பலாதன செயேல்
25. அரவம் ஆட்டேல்
26. இலவம் பஞ்சில் துயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகு அலாதன செயேல்
29. இளமையில் கல்
30. அறனை மறவேல்
31. அனந்தல் ஆடேல்
32. கடிவது மற
33. காப்பது விரதம்
34. கிழமைப்பட வாழ்
35. கீழ்மை அகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப்பிரியேல்
38. கெடுப்பது ஒழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளைவிரும்பேல்
42. கோதாட்டு ஒழி
43. சக்கர நெறி நில்
44. சான்றோர் இனத்திரு
45. சித்திரம் பேசேல்
46. சீர்மை மறவேல்
47. சுளிக்கச்சொல்லேல்
48. சூது விரும்பேல்
49. செய்வன திருந்தச்செய்
50. சேரிடம் அறிந்து சேர்
51. சை எனத் திரியேல்
52. சொல் சோர்வு படேல்
53. சோம்பித்திரியேல்
54. தக்கோன் எனத்திரி
55. தானமது விரும்பு
56. திருமாலுக்கு அடிமை செய்
57. தீவினை அகற்று
58. துன்பத்திற்கு இடம் கொடேல்
59. தூக்கி வினை செய்
60. தெய்வம் இகழேல்
61. தேசத்தோடு ஒத்து வாழ்
62. தையல சொல் கேளேல்
63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்
65. நன்மை கடைப்பிடி
66. நாடு ஒப்பன செய்
67. நிலையிற் பிரியேல்
68. நீர் விளையாடேல்
69. நுண்மை நுகரேல்
70. நூல் பல கல்
71. நெற்பயிர் விளை
72. நேர்பட ஒழுகு
73. நைவினை நணுகேல்
74. நொய்ய உரையேல்
75. நோய்க்கு இடம் கொடேல்
76. பழிப்பான பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைபடச் சொல்லேல்
79. பீடு பெற நில்
80. புகழ்ந்தாரைப்போற்றி வாழ
81. பூமி திருத்தி உண்
82. பெரியாரைத்துணை கொள்
83. பேதமை அகற்று
84. பையலோடு இணங்கல்
85. பொருள் தனைப்போற்றி வாழ்
86. போர்த்தொழில் புரியேல்
87. மனம் தடுமாறேல்
88. மாற்றானுக்கு இடம் கொடேல்
89. மிகைப்படச்சொல்லேல்
90. மீதூண் விரும்பேல்
91. முனை முகத்து நில்லேல்
92. மூர்க்கரோடு இணங்கேல்
93. மெல்லினல்லாள் தோள் சேர்
94. மேன் மக்கள் சொல் கேள்
95. மை விழியார் மனை அகல்
96. மொழிவது அறமொழி
97. மோகத்தை முனி
98. வல்லமை பேசேல்
99. வாது முற்கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடுபெற நில்
102. உத்தமனாய் இரு
103. ஊருடன் கூடி வாழ்
104. வெட்டெனப்பேசல்
105. வேண்டி வினை செய்யேல்
106. வைகறைத்துயில் எழு
107. ஒன்னாரைத் தேறல்
108. ஓரம் சொல்லேல்



PRINT @ : THAMILARASAN PRINTERS,KILINOCHCHI.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org